**கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் - II - 2018**

---

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் (வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை செயற்திட்டம்) கட்டம் II இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2008 யூலை 29 மற்றும் 2011 மார்ச் 22 ஆந் திகதிய SL-P91 மற்றும் SL - P101 எனும் கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தினது II ஆம் கட்டத்திற்கான கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், தற்போது வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்கவிப்பு அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கொழும்பு நகர்ப்புற பிராந்திய போக்குவரத்து நெரிசலைக் குறைத்து நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதற்கு கொழும்பு நகரை மையமாகக் கொண்டு தெற்கு அதிவேகப் பாதை மற்றும் ஏனைய தேசிய வீதிகளை இணைப்பதற்கான அதிவேகப் பாதையைக் கொழும்பின் புறநகர்ப் பிரதேசத்தில் நிர்மாணிப்பது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் II ஆம் கட்ட மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 44,097 மில்லியன் ஜப்பானிய யென்களுக்கு நிகரான ரூபா 55,482 மில்லியனாகும். அதில் 37,406 மில்லியன் யென்களுக்கு நிகரான ரூபா 46,759 மில்லியன் ஜப்பானிய சர்வதேசக் கூட்டுறவு முகவர் நிலையத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடாகியிருந்தது. செயற்திட்டத்தின் II ஆம் கட்ட நிர்மாண வேலை 2015 யூலை 18 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்ததுடன் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. பௌதீக முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

ரூபா 44.88 பில்லியன் கிரயத்தில் 2011 நவம்பரில் வழங்கப்பட்டிருந்த கடுவல தொடக்கம் கடவத்த வரையான வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை வீதியின் 8.9 கிலோமீற்றர்களின் நிர்மானத்தின் மீதான ஒப்பந்தமானது 2012 சனவரி 09 இல் ஆரம்பிக்கப்பட்டு 2015 சனவரி 08 இல் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், நெடுஞ்சாலையின் நிர்மான வேலைகள் 190 நாட்கள் தாமதத்துடன் 2015 ஜூலை 18 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

### 2.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு மேலாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ரூபா 311.60 மில்லியன் தொகையான ஒப்படைப்பு கட்டணங்கள் கடனின் மீளப்பெறப்படாத தொகை மீது 2018 திசெம்பர் 31 வரை கடன் வழங்கும் முகவரினால் திரும்பப் பெறப்பட்டிருந்தது. | மேலதிக செலவுகள் ஏற்பட்டன. | கருத்துரைக்கவில்லை. | ஒதுக்கீடுகளின் பயன்படுத்தல்கள் மீதான தாமதத்திற்கான காரணங்கள் புலனாய்வு செய்யப்படல் வேண்டும். |

### 2.3 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| ஒப்பந்தத்தின் கால நீடிப்பின் காரணமாக இலாபங்களின் நட்டத்தின் மீது ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 4.37 பில்லியன் தொகையான நீடிப்பு கொடுப்பனவு ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 53.1 இன் கீழ் செயற்திட்டத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்ததாரர் பிணக்குகள் தீர்ப்பு சபைக்கு இப் பிரச்சினையினை தெரிவித்திருந்தார். இருப்பினும், உரிய பிணக்குகள் 2019 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த கிரயத்தின் வரம்பு மீரலுக்கான சாத்தியம். | ஒப்பந்ததாரர் நீடிப்பு கிரய கொடுப்பனவினை 2019 ஓகஸ்டில் பிணக்குகள் தீர்ப்பு சபைக்கு தெரிவித்தார். ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம், பிணக்குகள் தீர்ப்பு சபைக்கான கொடுப்பனவின் குறிப்பிற்கான எந்த கால வரையறையும் இல்லை. | குறைந்தபட்ச நட்டங்களுடன் உரிய வழக்கினை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.4 காணி சுவீகரிப்பின் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கடுவல தொடக்கம் கடவத்த வரையான நெடுஞ்சாலையின் நிர்மானத்திற்காக சுவீகரிக்க பட்டியலிடப்பட்டிருந்த 185 அரச காணிகள் உள்ளடங்களாக 1,442 காணித்துண்டுகளில், 1,141 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,458 மில்லியன் இழப்பீட்டு தொகை இதன் மீது செலுத்தப்பட்டுமிருந்தது. இருப்பினும், 667 காணித்துண்டுகள் மாத்திரமே குறித்த திகதியில் உள்ளவாறு காணிசுவீகரிப்பு சட்டத்தின் | இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீது மேலதிக வட்டி கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | கருத்துறைக்கவில்லை. | காணி சுவீகரிப்பின் மிகுதி வேலைகளின் பூர்த்தியாக்கள் மீதான செயன்முறைகளை துரிதப்படுத்த செயறடதிட்டத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, மொத்தமாக ரூபா 299.51 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதியில் இழப்பீட்டு கொடுப்பனவினை செலுத்துவதன் தாமதத்தின் மீது வட்டியாக
செலவிடப்பட்டிருந்தது.